

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (22.8.2023) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மற்றும் சென்னை, ஜெருசலம் கல்லூரி இணைந்து நடத்திய "ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம் என்ற விழிப்புணர்வு பேரணியை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்து விழிப்புணர்வு துண்டு பிரச்சாரங்களை வழங்கி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல்துறை தலைவர் ரூபேஷ்குமார் மீனா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, ஜெருசலம் கல்வி அறக்கட்டளை தலைவர் முனைவர் எம்.மாலா, ஜெருசலம் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ரமேஷ் செங்குட்டுவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பி.வெங்கடேசன் ,வி. சரஸ்வதி ஆகியோரின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.மாநிலச் சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர்கள் பழ. செல்வகுமார், ஜி. வினோத் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வ.முத்துசாமி,ஏ.வி. ஆறுமுகம்,எம்.எஸ். நாகலிங்கம்,த.கரிகால சோழன் ஆகியோர் வரவேற்றனர். டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ,வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன்,கலாநிதி வீராசாமி எம்.பி, சென்னை,திருவள்ளூர் மண்டல சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர்கள் லயன் எம்.தீனதயாளன்,என். எஸ். பாலசுப்பிரமணியன்,பி. சுந்தர்ராமன்,கே. வி.எம் நாகவள்ளி பிரபாகரன் எம்.சி,எம்.பாஸ்கரன்,இ. ஜேக்கப்,பூண்டி எம்.எஸ். அருண்,ராமாபுரம் வி. ராஜேஷ்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் – செஞ்சி

# கலைஞர் நூற்றாண்டு விழா - பட்டிமன்றம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - கோவி.செழியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, ஆக. 24

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்ட மன்ற தொகுதிதிமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறப்பு பட்டி மன்றம் செஞ்சிதிருவண்ணா மலை சாலை இந்தியன் வங்கி அருகில் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜய குமார், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயண மூர்த்தி, சாந்தி சுப்பிர மணியன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் செஞ்சி மொக்தியார் அலிமஸ்தான்,அனந்தபுரம் முருகன்,பேரூர் செயலாளர்கள் செஞ்சி கார்த்திக், அனந்தபுரம் சம்பத் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டிமன்றத்தினை தொடங்கி வைத்துதிமுக மூத்த நிர்வாகிக்கு நலத் திட்ட உதவி வழங்கி சிறப் புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில்தமிழ்நாடு அரசு தலைமை கொறடா முனைவர் கோவிசெழி யன் நடுவராக பங்கேற்ற பட்டிமன்றத்தில் ஆட்சி பணியே என்ற தலைப்பில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் கரூர் முரளி, தலைமைக் கழக சொற்பொழிவாளர் தூத் துக்குடி சரத் பாலாவும்,

இயக்கப் பணியே என்ற தலைப்பில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாள ரும் தோல் உற்பத்தி தொழி லாளர் நல வாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி,

தலைமை கழக சொற் பொழிவாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

ஆட்சிப் பணியே என்ற தலைப்பில் பேசிய கரூர் முரளி:

கர்நாடக மாநிலத்தில் பிஜேபி ஆட்சி இருந்ததை விரட்ட வேண்டும் என முடிவு செய்து பிஜேபியை கர்நாடகத்தில் இருந்து விரட்டுவதற்கு காரணம் தளபதி மு .க . ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சி தான் காரணம் என்றுகர்நாடகாகாங்கிரஸ்கட்சிதலைவர் சிவக்குமார் தெரிவித்து ள்ள தாக அவர் தெரிவித்தார்.

தலைமைக்காக சொற் பொழிவாளர் தூத்துக்குடி சரத் பாலா பேசுகையில்:

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் திரும்பி பார்க்கின்ற வகையில் திரா விட மாடலாட்சியை தள பதி நடத்திவருகிறார்.அந்த வகையில் ஆட்சிப் பணி இருந்தால் தான் செப்டம் பர் 15ஆம் தேதி மகளிர் உரி மைத்தொகை 1000 ரூபாய் வழங்கப்படும் மேலும் மத் தியில்உள்ள மோடியை மாற்றி இந்திய கூட்டணி வென்றால் தான் இந்த தேசத்தை பாதுகாக்க முடி யும் என அவர் வாதிட்டார்.

தொடர்ந்து இயக்கப் பணியே என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி பேசுகையில்:

முத்தமிழ் அறிஞர் டாக் டர் கலைஞர் சிலையை தந்தை பெரியார் சிலைக் கும், பேரறிஞர் அண்ணா வின் சிலைக்கும் நடுவில் அண்ணா சாலையில் வைத்து குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடுவை அழைத்து வந்து சிலையை திறந்து வைத்த வர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

அகில இந்தியாவில் உள்ள அத்தனை தலைவர்க ளும் தலைவர் கலைஞரின் பின்னால் அணி திரண்ட தைபோல இன்றைக்கு தலைவர் மு. க. ஸ்டாலின் பின்னால் அணி திரண்டு நீங்கள் வழி காட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

தலைவர் கலைஞர் எப் படி இந்த இயக்கத்தை அகில இந்தியாவில் வழி நடத்தி னாரோ அப்படி வழிநடத் தக்கூடிய ஒரு தலைவர் இவர்தான் என்று தளபதியை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து தலைமைக் கழக சொற்பொழிவாளர் சைதை சாதிக் பேசுகையில்:

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அணியில் அங் கம் வகிக்கிறதோ திமுக எப்போதெல்லாம் தேசிய அரசியலில் கால் எடுத்து வைக்கிறதோ அப்போதெல் லாம் இந்தியாவில் ஆட்சி மாற்றத்தை உண்டாக்கிய இயக்கம் திராவிட முன் னேற்ற கழகம்.

கட்சி இருந்தால் தான் இயக்கம் இருந்தால் தான் ஆட்சியைப் பற்றி பேச முடியும் ஒரு மாநில கட்சி யில் தலைவராக ஒருவர் 50 ஆண்டு காலம் இருந்தார் என்றால் முத்தமிழறிஞர் கலைஞரை தவிர வேறு யாரும் இல்லை என்று சைதை சாதிக் புகழாரம் சூடினார்.

பட்டிமன்றம் நடுவராக பங்கேற்ற தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி. செழியன் பேசுகையில்

14 வயதில் தமிழ் கொடியை கையில் பிடித்த வர் முத்தமிழறிஞர் கலை ஞர் என்றும் தமிழ் மொழி யைதேசிய மொழியாக்கிய தலைவர் தி.மு.க. தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்றால் கொள்கையை வென்றெடுக்க ஆட்சி தேவை.

அந்த வகையில்குடத்தில் இட்ட விளக்கு இயக்கப் பணி என்றால் கும்மியில் மீது ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு ஆட்சிப் பணி என் றும் ஆட்சிப் பணியின் தொடர்ச்சி இயக்கத்தை வலுப்படுத்தும் இயக்கத்தை வலுப்படுத்த ஆட்சிப் பணி தேவை என்று தீர்ப்பளித்தார்.

நிகழ்ச்சியில் மாநிலத் தீர் மான துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி, மாநில தீர்மான குழு உறுப் பினர் சேது நாதன், மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், மாநில விவசாய இணைச் செயலாளர் செந்தமிழ் செல் வன், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் ரவிக்கு மார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ரமணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணா துரை, துரை, இளம்வழுதி, செழியன், ராஜாராம், மணி மாறன், ரவிச்சந்திரன், தயா ளன், பழனி,திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர் மலா ரவிச்சந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கதிரே சன், செல்வராஜ், மணி வண்ணன், ரவி, பாலகிருஷ் ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றிய பெருந்தலைவர்கள் கண்மணி நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், செல்வி ராம சரவணன், அன்பு செழி யன், சசிகலா மோகனசுந்த ரம், புஷ்பவல்லி குப்புராஜ், மாவட்ட விவசாய தொழி லாளர் அணி தலைவர் அஞ் சாஞ்சேரி கணேசன், முன் னாள் செஞ்சி நகர செய லாளர் காஜா நசீர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப் பாளர்கள் ராம சரவணன் , பிரபு,ஒன்றிய குழு துணை தலைவர்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன், புனித ராமஜெயம் துணைத் தலைவர்கள் ராஜலட்சுமி செயல்மணி, அமுதா கல் யாண் குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் கள் ராஜ சக்தி, அன்சாரி, சக்தி பிரியன், ரவிச்சந்திரன், அண்ணாதுரை, எஸ்.செந் தில்குமார், கே.செந்தில் குமார், பா.செந்தில் குமார், புலவர் கோ. தமிழர சன்,நாட்டார்மங்கலம் தமி ழரசன், சந்திரன், ரிஸ்வான், மாத்தூர் தாஸ், பிரசன்னா, சிவப்பிரகாசம், அறிவழ கன், சௌகத் அலி, ரசூல், விவேகானந்தன் ,அலெக்ஸ், பாரதி, சுதா பாஸ்கர், புஷ் பாசேகர், சோடா பாஷா, என். கே .குமார், சி. மாணிக் கம், எஸ்.பி. சம்பத், ஆறுமு கம், சம்பத் சிங்கம் சேகர், முனுசாமி, முபாரக், உள் ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர் வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள் ளாட்சி பிரதிநிதிகள், உள் ளிட்டோர் கலந்து கொள் கின்றனர். நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### புதுக்கோட்டை

# மன்னர் ராஜகோபால தொண்டைமான் மணிமண்டபம் அமையும் இடம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - மு.பெ.சாமிநாதன் - சிவ.வீ.மெய்யநாதன் - மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆய்வு!

புதுக்கோட்டை ஆக.24

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு அருங் காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ள இடத் தினையும், புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தின் செயல்பாடுகளையும், சட் டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய் தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகி யோர் 16.08.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத் தில் நிறுவப்பட்டுள்ள, டாக் டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய் தித் துறை செயலாளர் மருத் துவர் இரா.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா ஆகி யோர் உடனிருந்தார்கள்.

புதுக்கோட்டையில் 1861 ஆம் ஆண்டு முதல் அரசு பொது அலுவலக வளாகத்தில், செயல்பட்டுவ ரும் அரசு கிளை அச்சகத் தின் மூலம் புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடு துறை ஆகிய மாவட்டங்க ளைச் சேர்ந்த அரசிதழ்கள் அச்சடிக்கப்பட்டு வருகின் றன. மேலும் நிலைப்படுத் தப்பட்ட மற்றும் நிலைப்ப டுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் பல்கலைக்கழக விடைதாள் கள், தேர்வுத்துறை மற்றும் தேர்தல் துறை படிவங்கள், மருத்துவத்துறை, காவல் துறை, நிதிவிதித்தொகுப்பு மற்றும் கருவூலத்துறை ஆகிய துறைகளுக்குரிய படி வங்கள் மற்றும் பதிவேடு கள் இந்த அச்சகத்தின் மூலம் அச்சடிக்க ப்பட்டு வருகின்றன. அதன்படி அமைச்சர் பெருமக்களால் புதுக்கோட்டை கிளை அச் சகத்தின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக பார் வையிட்டு ஆய்வு செய்யப் பட்டது. மேலும் இங்கு நிறு வப்பட்டுள்ள புதிய அச்சு இயந்திரங்கள் குறித்தும், அச்சடிக்கப்பட்டுவரும் படி வங்கள், பதிவேடுகள் குறித் தும், இந்த அச்சகத்திற்கு அதிவிரைவாக அச்சிட தேவையான அதிநவீன அச்சு இயந்திரங்கள் குறித் தும், கூடுதல் கட்டடம் கட் டுவதற்காக ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ள இடம் குறித்தும், கட்டுமானப் பணி முன்னேற்றம் குறித் தும், அமைச்சர் பெருமக்க ளால் அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

மேலும், தமிழகத்தில் 300 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட புதுக்கோட்டை சமஸ்தானத்தின் 9வது மன் னரான ராஜா ராஜகோ பால தொண்டைமான் அவர்கள் தனது பதவிக் காலத்தில் புதுக்கோட்டை மக்களின் நலனிற்காக கல்வி, போக்குவரத்து, விவ சாயம், நீர்பாசனம். உள் ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி தந்த பெருமைக் குரியவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மன்னர் ராஜகோ பால தொண்டைமான் அவர் களின் எளிமையையும், மக் களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் நினைவு கூரும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் புதுக்கோட்டையில் மன் னர் ராஜகோபால தொண் டைமான் அவர்களுக்கு அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்ட பம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப் படையில் மன்னர் ராஜகோ பால தொண்டைமான் அவர்களுக்கு அருங்காட்சி யகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப் பதற்காக, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவ லக வளாகத்தில், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத் தினை, அமைச்சர்கள் எஸ். ரகுபதி , மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகி யோர் நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார்கள்.

மேலும் மன்னர் ராஜ கோபால தொண்டைமான் அவர்களுக்கு ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சி யகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் கட்டுமா னப் பணிகளை மிகவும் கலைநேர்த்தியுடன், சிறப் பான முறையில் மேற் கொள்ளவும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் வகை யில் மன்னரின் வாழ்க்கை வரலாற்றை இக்கால தலை முறையினர் அறிந்து கொள் ளும் வகையில் மன்னரால் பயன்படுத்தப்பட்ட பொருட்களை கொண்டும், போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை கொண்டும் காண்போரை கவரும் வகை யில் பணிகளை மிக நேர்த் தியாக மேற்கொள்ள பொதுப்பணித்துறை அலுவ லர்களுக்கு அமைச்சர் பெரு மக்களால் அறிவுறுத் தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்தியாவின் முதல் பெண் சட்டப்பே ரவை உறுப்பினர், இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்த்திருத்த பெண்ம ருத்துவர் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி அம்மை யார் அவர்களுக்கு புதுக் கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத் தில், செய்தி மக்கள் தொடர் புத் துறையின் சார்பில் 10.05.2023 அன்று காணொ லிக்காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட் டுள்ள டாக்டர் முத்து லட் சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மு.பெ.சாமிநா தன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர்களால் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளில், முன் னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , மாவட்ட வருவாய் அலுவ லர் மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மருத்தவக்கல் லூரி முதல்வர் (பொ) மரு. ராஜ்மோகன், மாவட்ட கால்பந்து கழக துணைத் தலைவர் / முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திர சேகர், நகர்மன்ற துணைத்த லைவர் லியாகத்அலி, உதவி செயற்பொறியாளர் (பொ.ப.து.) சிந்தனை செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.பிரே மலதா, உதவி பொறியாளர் பாஸ்கர், அரசு கிளை அச்ச கத்தின் துணை பணி மேலா ளர் ராஜ்குமார், வட்டாட் சியர் விஜயலட்சுமி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) அ.பாரதி, க.மதிய ழகன், ஆ.செந்தில், சு.சண் முகம், என்.சாத்தையா, மு.க.ராமகிருஷ்ணன், எம். பரமசிவம், என்.சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சி.சண்முகம், கே.பி.அய்யப் பன், எம்.எம்.பாலு, மகேஸ் வரி சண்முகநாதன், கே.சி. சிவக்குமார், கே.எம்.சுப்பிர மணியன், க.நைனா முகம் மது, வே.ராஜேஸ், வி.ஜி. ஆர்.மணிவண்ணன், வட வாளம் க.செ.மணிமாறன், வெற்றிச்செல்வன், உள் ளாட்சி அமைப்புகளின் பிர திநிதிகள் மற்றும் அரசு அலு வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி -சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

# புதுக்கோட்டை வடக்கு–தெற்கு மாவட்ட இளைஞர் அணிக் கூட்டம்!

## தலைமை: கே.கே.செல்லப்பாண்டியன்! அமைப்பாளர்கள் சு. சண்முகம்-த.மணிராஜன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஆக.24-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம் மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் த.மணி ராஜன் ஆகியோரின் கூட்ட றிக்கை வருமாறு:-

சேலத்தில் நடைபெற இருக்கிற மாநில இளைஞ ரணி மாநாட்டை முன் னிட்டு தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத் துறை அமைச்சர் உத யநிதி ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டையில் 27.8.2023ம் தேதி மாலை 4 மணியளவில் பங்கேற்கும் கூட்டத்திற்கு இளைஞரணி யினரை தயார்படுத்தும் வண்ணம் இளைஞரணி யி னுடைய செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.8.2023 -வியாழக்கிழமை) சரியாக காலை 9 மணிக்கு புதுக் கோட்டை நகர் மாலையீடு அருகில் உள்ள கற்பக விநா யக திருமண மண்டபத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், தமிழக சட்டத்துறை அமைச் சர் எஸ்.ரகுபதி தலைமை யிலும், சுற்றுச் சுழல், கால நிலைமாற்றத்துறைஅமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் புதுக்கோட்டை மாவட்டத் திற்கு பொறுப்பாளராக நிய மிக்கப்பட்டுள்ள மாநில இளைஞரணி துணைச்செய லாளர் இளையராஜா மற் றும் தலைமைக் கழக மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலை யில் நடைபெறும்.

இந்த இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட் பட்ட மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணியினுடைய உறுப்பினர்கள் அனைத்து அணி தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பா ளர்கள், நகர ஒன்றிய பெருந் தலை வர்கள், துணை பெருந் தலை வர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண் டுமென கேட்டுக்கொள்கி றோம்.

இவ்வாறு சு.சண்முகம், த.மணிராஜன் ஆகியோர் கூறியுள்ளனர்.